# காளியும் பழந்தமிழரும்

*முனைவர் ஆ. முத்துக்குட்டி*
உதவிப் பேராசிரியர்
முதுகலை வரலாற்றாய்வியல் துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

இந்திய அரசியலையும் அதன் பல்வேறு அமைப்புகளையும் சாதிகளின் தலையீடு பயங்கரமாக பீடித்துள்ளது. வாய்மொழியாகக் கண்டிப்பவர்கள் உட்பட அனைவரும் சாதிப்பாகுபாட்டை மௌனமாகவும், பூரணமாகவும் ஒப்புக்கொள்கின்றனர். அப்பாகுபாடு, சமூகங்களில் பட்டிதொட்டிகளிலெல்லாம் உயிரோட்டமாக செயல்பட்டு வருகிறது. அரசியலில் சாதிகளின் பங்கினை கண்டிக்கும் அதேநேரத்தில் தேசிய ஒற்றுமையைப் பாதிக்குமளவிற்கு பலவாறாக செயல்படத் தொடங்கிவிடும் எனவும் அறிஞர்கள் எச்சரிக்கின்றனர். சாதிகள் மக்களாட்சி அரசியல் அரங்கத்தில் இனத்துப் பாரம்பரிய சிறப்புத் தன்மைகளின் அடிப்படையில் அரசியலறிவு இல்லாத ஒரு சமூகத்தை அறிவுள்ளதாக்குகின்றன. எல்லாச் சமூகங்களும் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவைதாம் என்பதை வரலாறு உணர்த்தும். தென் தமிழக பொருளாதார வரலாற்றில் முக்கிய பங்கு உண்டு என்றால், அது சான்றோர் என்ற சாணார் இன மக்களின் பங்காகும். இவர்கள் பத்திரகாளியின் (காளி) மக்கள் என்று அழைக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இக்கட்டுரையில் காளியும் பழந்தமிழர்களாகிய சான்றோர்களின் நிலையினையும் பற்றி காண்போம்.

## தியோகாளி

தென் அமெரிக்காவின் மாயர்கள், ஆத்தாள் என்ற பெண் தெய்வத்தை வணங்கியதாகத் தென் அமெரிக்க வரலாறு கூறுகிறது. மாயர்கள் மண்மேடு குவித்து அதன்மேல் பல கற்கோவில்களை கட்டி தியோகாளி என்னும் பெயரில் வழங்கி வந்தனர். தமிழில் வழங்கப்படும் தூயக் காளியே தியோகாளி என்று திரிந்ததாக மொழியியல் வல்லுநர்கள் குறிக்கின்றனர். மேலும் மாயர் வகுப்பினரின் இனக்கிளை மரபினரான ஆஸ்த்தோக்குகள் நரபலிக் கொடுக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தனர். தமிழகத்தில் கி.பி. பதினாறாம் நூற்றாண்டுவரையிலும்தாமாகவே முன்வந்து பலியிட்டுக்கொள்ளும் முறை வழக்கத்திலிருந்தது. இதனை நவக்கண்டம் எனக் குறித்தனர்.

### தாய்த் தெய்வவழிபாடு

மனித இனத்தின் தொடக்கக்காலத்தில் குழுக்களின், குலங்களின் தலைவியாக விளங்கியவள் பெண்ணேயாவாள். மனித இனம் தோன்றி வளர்வதற்குப் பெண் நிலைக்களமாக இருப்பதால் பெண்ணே தெய்வமாகக் கருதப்பட்டாள்.

வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட வரலாற்றுக்கால தமிழர்களிடத்தில் தாய்த் தெய்வவழிபாடு சிறந்திருந்தது. கால்நடை வளர்ப்பினை குலத்தொழிலாகக் கொண்ட மக்களிடத்தே ஆண் தெய்வ வழிபாடு ஏற்றம் பெற்றது. எவ்வாறெனில் வேளாண்மை பெண்கள் வாயிலாகவே தோற்றம் பெற்றது. குடும்ப உறுப்பினர்களின் உணவுத் தேவைக்காக ஆண்கள் வேட்டையாடுதல் மற்றும் மீன் பிடித்தல் போன்ற தொழிலில் ஈடுபட பெண்களோ தாங்கள் வசிப்பிடத்திலேயே சிறியஅளவில் உணவுப்பொருள்களை விளைவிக்க ஆரம்பித்தனர். பெண்கள் உழுக்கருவியான சிறிய சூல வடிவ கலப்பையைப் பயன்படுத்தினர். இக்கலப்பையே நாளடைவில் பெண் தெய்வத்திற்குரிய சூலாதமாக தோற்றம் பெற்றது. பெண் தெய்வத்திடமிருந்து காலப்போக்கில் சூலத்தை ஆண் தெய்வங்கள் தமதாக்கிக் கொண்டனர்.

### காளியின் தோற்றம்

தமிழ்நாட்டின் பாலை நிலத்துத் தேவதையாகக் கொற்றவை வழிபடப்பட்டாள். வடவர் கூட்டுறவின் காரணமாக துர்க்கை என்று காலப்போக்கில் இவளே அழைக்கப்பட்டாள். துர்க்கைக்கு விழா எடுத்தலின்போது குமரிப் பெண்ணை துர்க்கையைப் போல் அலங்கரித்து ஊர்வலமாக அழைத்துச் செல்வர். சிலப்பதிகாரத்தின் வேட்டுவவரி இதைத் தெளிவாக விளக்குகிறது.

மதுரை நகர மேற்கு வாயிலில் கொற்றவைக்குக் கோயில் இருந்தது. கண்ணகி, கோவலனை இழந்து மதுரை நகரை விட்டுப்போகையில் கொற்றவை கோயில் வாசலில் தன் வளையல்களை உடைத்ததைச் சிலப்பதிகாரம் நயம்படப் பேசுகிறது. கொற்றவை வழிபாடே காலப்போக்கில் சக்தி வணக்கமாக மாறியது. சக்தியை முழு முதற்கடவுளாகக் கொண்ட சமயப்பிரிவு சாக்தேயம் அல்லது வாமம் எனப்பட்டது.

காளி தேவியின் வழிபாட்டின் தோற்றத்தை அறிய வேண்டுமானால் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் கிடைக்கப் பெற்ற பெண் தெய்வத்தின் சுட்ட களிமண் சிற்பம் பெரும் ஆதாரமாகும். மார்புப் பெருத்த நிலையில் காணப்படும் இச்சி ற்பம் சங்கக் காலத்திற்கும் முந்தையக் காலகட்டம். அதாவது கி.மு. 600-ஐ சேர்ந்ததாகக் கருதப்படும் இச்சிற்பம் காளி தெய்வத்தின் வடிவமே என்று தொல்லியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். காளி தேவிக்கு முதியோள் என்ற பெயர் சங்க இலக்கியங்களில் சுட்டப்படுகிறது. எல்லா மக்களையும் பெற்றெடுத்தவள் என்னும் பொருளில் தொடக்கக் காலத்தில் இத்தெய்வ உருவம் விருப் பெருத்த நிலையில், பெரிய மார்புகளுடன் வணங்கப்பெற்றது. வளமையின் குறியீடாகவும் காளித் தெய்வமே தொடக்கக்காலத்தில் வணங்கப்பட்டு வந்தமையைத் தொல்லியல் சான்றுகள் தெளிவாக்குகின்றன.

### சிந்துவெளியில் காளி

கற்கால மனிதன் களிமண்ணால் செய்த சுட்ட தாய்தெய்வ வடிவங்கள் கிடைத்துள்ளன. இவை அனைத்துமே ஒத்த வடிவத்தில் காணப்படுவது வியப்பிற்குரியது. பாலை நிலத்தில் மட்டுமே பெண் தெய்வ வழிபாடு பின்பற்றப்படவில்லை என்ற பேருண்மையை இக்கண்டுபிடிப்புகள் உணர்த்துகின்றன.

சிந்துவெளியில் எண்ணற்ற பெண் தெய்வ உருவங்கள் கிடைத்துள்ளன. சிந்துவெளி மக்கள் தமக்கு வேண்டிய அனைத்து உணவுப் பொருட்களையும் தந்திட்ட தரையைப் பெண் தெய்வமாக கருதி வழிபட்டு வந்தார்கள். அமைதியான முகத்தோற்றம்கொண்ட இத்தெய்வத்தின் உருவம் குழந்தையை வைத்திருக்கும் நிலையில் காட்சி தருகிறது. இத்தெய்வ உருவத்தைக் காளியாகவே வரலாற்றாளர்கள் கருதுகின்றனர்.

## இலக்கியத்தில் காளி

சங்க இலக்கியங்களில் உற்றுநோக்கும் போது, கடவுள் வழிபாட்டில் வெறியாட்டு முறையே மிகப் பழமையானதாகும். வேட்டையாடுவதன் மூலமாக உணவு கிடைத்தபோது மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். உணவு கிடைக்காத வேளையிலும் எல்லோரும் ஒன்று திரண்டுக் கடவுளை வேண்டி மன்றாடினர். முன்னைய ஆட்டம் மகிழ்ச்சியையும், பின்னைய ஆட்டம் வேண்டுதளையும் குறிக்கிறது. வேட்டையாடியபோதும், இயற்கையின் எதிரில் தோல்வியுற்ற போதும் மனிதன் தன்னைக் காட்டிலும் அளப்பெரும் ஆற்றலை உடைய சக்தி இருப்பதாக நம்பினான். இதுவே பின்னாளில் வழிபாடாக மாறியது. இவ்வழிபாட்டில் கொற்றவைக்காக நிகழ்த்தப் பெற்ற கொற்றவை வெறியாட்டுச் சிறப்புப் பெற்றதாகும். இக்கொற்றவையே காளியின் அம்சமாகக் கருதப்பட்டது. தாயைத் தெய்வமாக வழிபடும் முறை, திராவிடப் பண்பாட்டில் முக்கியக் கூறாகும்.

## சான்றோர் நிலை

திராவிடர்களான சான்றோர்களும் வேளாண்மைப் பாரம்பரியத்தில் வந்தவர் களேயாவர். பனைத் தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்த இம்மக்களைப் பனைவேளாண் என்று கல்வெட்டுக்கள் வேளாண் வகுப்பினராக அடையாளப்படுத்துகின்றன. பனை மரங்கள் அடர்ந்து இருந்த இடத்தில் குடியேறிய மக்கள் அங்கு தங்களின் முன்னோர்களின் குடும்பக் கோயில்களும் பனை மரங்களையும் ஆட்சியின் சின்னங்களாக உருவாக்கி வாழ்ந்தார்கள். ஆகவேதான் பெண் தெய்வத்தை முன்னிலைப்படுத்தும் சான்றோர்கள், தங்களைக் காளியின் மைந்தனாக சிறப்பித்துக் கொள்கிறார்கள்.

மாரியம்மன், காளியம்மன் என்பவை பத்திரகாளியின் வேறு பெயர்களாகும். சிவபெருமானின் மனைவியான பார்வதி தேவியின் வீறுடை அவதாரமே பத்திரகாளியாகும். இவளே காளி என்றும் அழைக்கப்படுவாள். இந்த பத்திரகாளியே சான்றோர் இன மக்களின் தெய்வமாகக் கருதப்படுகிறாள். ஒரு சமயத்தில் காளிக்கும், சிவபெருமானுக்கும் நாட்டியப் போட்டி நடந்ததாகவும் அதில் காளி தேவி தோற்றதாகவும் கூறும் புராணக்கதை மறைமுகமாக பெண் ஆதிக்கத்திலிருந்து ஆண் ஆதிக்க சமூகம் மாற்றம் பெற்றதையேக் குறிப்பிடுகிறது.

சான்றார் என்ற வார்த்தையே சாணார் என்ற சொல்லின் திரிபுவாகும். சான்றோர்களின், ஒரு பிரிவினர் இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்திற்கு அருகில் வாழ்ந்தவர்கள். இவர்கள் இராமநாதபுரம் வழியாக திருநெல்வேலி அருகில் “மாநாடு” என்றத் தேரிப் பகுதியைத் தேர்வு செய்து அங்குக் குடியேறினர். அவ்வாறு வரும் சமயம் கிழக்கில் சிறந்தது என்று அழைக்கப்பட்டு வந்த பனை மர வித்துக்களை எடுத்துவந்து மாநாடுப் பகுதியில் பயிரிட்டு வளர்த்து வந்தனர்.

பின்னர் பனையேறும் தொழிலையும் செய்துவந்து, பின் பல இடங்களில் குடியேறி பனை ஏறும் தொழிலையும் விரிவு செய்தார்கள்.

தேரிகள் நிறைந்த தரிசு நிலமான மணற்பாங்கான இடத்தில் சான்றோர் இன மக்கள் குடியேறி வாழ்ந்து வந்தார்கள் என்பதைப் பல சான்றுகள் கூறும். பழந்தமிழர்களாகிய சான்றோர்களின் வரலாற்றை உற்றுநோக்கும் சமயத்தில் ஆட்சியாளர்களாக இருந்து தமிழ் மண்ணைச் சிறப்புடன் ஆண்டதையும், மகுடம் சூட்டப்பட வேண்டிய எங்கள் தலையில் கூடையைச் சுமக்க மாட்டோம் எனக்கூறி மறுத்த செய்தியின் வழியில் பார்க்கும்போது இவர்கள் இவர்கள் ஓர் உயர் நிலையில் வாழ்ந்த இனம் என்பதை அறியலாம்.

## முடிவுரை

காளியை வழிபட்டு வந்த மக்கள் தங்களைப் பத்திரகாளியின் மக்களாக அழைத்துக்கொண்டனர். பழந்தமிழர்களாகிய சான்றோர் இனம் தங்களது விடா முயற்சியால், தளராத உழைப்பால், அறிவுக்கூர்மையால் எல்லாத் துறைகளிலும் முன்னேறிப் பொருளாதாரத்தில் வளர்ந்து ள்ளார்கள். நிறைந்த செல்வமும், அதிகாரமும் கொண்டிருந்தச் சான்றோர்கள் அவர்களுக்குக் கீழ்ருந்தவர்களின் மரியாதையை ஈட்டிக் கொண்டனர். பழந்தமிழர் குடிகளில் சிறப்புப் பெற்ற குடி அல்லாது இனம் சான்றோர் இனமே.

## பயன்பட்ட நூல்கள்

1. எஸ்.டி. ஜெயபாண்டியன், நாடார் வரலாறு, சென்னை, 2001.
2. M.N. Srinivas, Caste in Modern India and other Essays, Bombay, 1962.
3. Selig Harrison, India the most Dangerous Decades, Princeton, 1960.
4. Lloyd I and Susanne H. Rudolph, The political Role of India's Caste Associations, Chicago.
5. Robert Caldwell, The Tinnevelly Shanars: a Sketch of Their Religion, and their Moral Condition and Characteristics, as a caste, Madras, 1849.
6. J.A. Stuart, A Mannual of the Tirunelvally District, Madras, 1879.
7. ச. சு. மகாலிங்கம், நாடார்கள் தோற்றமும் வரலாறும், மதுரை.
8. சிலப்பதிகாரம்
9. புறநானூறு
10. தோ. பரமசிவன், தெய்வங்களும் சமூக மரபுகளும், சென்னை, 2006.
11. துளசி. ராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புற தெய்வங்கள், சென்னை, 1985.
12. அ.கா. பெருமாள், தென்குமரியின் சரித்திரம், நாகர்கோவில், 2012.
13. வெ. பெருமாள்சாமி, சங்க கால தமிழகத்தின் சமூக நிலை
14. ஐராவதம் மகாதேவன், சிந்துவெளிப் பண்பாடும் சங்க இலக்கியமும்.